1973 நவம்பர் 26]

கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஒன்றியங்களிலுள்ள தெளிப்பான்கள்

* 408 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில் உள்ள 'ஸ்ப்ரேயர்கள்' அடிக்கடி பழுதடைந்து விவசாயிகளின் தேவைகளுக்குக் கிடைக்காமல் போவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதற்கு பரிகாரம் காண என்ன திட்டம் வகுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) கும்முடிப் பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் 15 விசை தெளிப்பான்கள் இருக்கின்றன. அவற்றில் 11 அரசு கணக்கிலும் 4 ஊராட்சி ஒன்றிய கணக்கிலும் உள்ளன. இவற்றில் 10 விசை தெளிப்பான்கள் நல்ல நிலையில் இருந்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள 5 விசை தெளிப்பான்கள் வேலை செய்யும் நிலையிலும் பழுதுபார்க்கும் நிலையிலும் இல்லை. இந்த ஆண்டில் புதிய தெளிப்பான்கள் வாங்க ஊராட்சி ஒன்றியம் திட்டமிட்டுள்ளது. இதைத்தவிர, இவ்வெல்லைக்கு உட்பட்ட ஊராட்சிகளிடம் 12 விசைத் தெளிப்பான்களும் 65 கையால் இயங்கும் தெளிப்பான்களும் உள்ளன. இவற்றில் 7 கையால் இயங்கும் தெளிப்பான்கள் வேலை செய்யும் நிலையில் உள்ளன. மற்றவை இந்த நிதி ஆண்டில் பழுது பார்க்கப்படும்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 4 விசை தெளிப்பான்கள் உள்ளன. அவை 15—9—1972 அன்று பழுதுபார்க்கப்பட்டன. ஆனால் அவற்றில் மூன்று மறுபடியும் பழுதடைந்து விட்டன. மற்றும் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட 30 விசை தெளிப்பான்கள் பெரும்பாலும் பழுதடைந்து அவைகள் மேலும் பழுதுபார்க்கப் பட்டு விவசாயிகள் உபயோகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டில் புதிய தெளிப்பான்கள் வாங்க ஊராட்சி ஒன்றியம் திட்டமிட்டுள்ளது. இதைத் தவிர 8 காலால் இயங்கும் தெளிப்பான்கள் உள்ளன. அவை நல்ல நிலையில் இருந்து விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

[1973 நவம்பர் 26

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து சில தெளிப்பான்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன என்பதும், பல அடிக்கடி பழுதடைந்து வருகின்றன என்கிற விவரம் வருகிறது. ஆகவே தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஊராட்சி தெளிப்பான்களை உடனுக்குடன் பழுது பார்க்க ஒரு புதிய திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே அந்தத் திட்டம் வகுக்கப்பட்டு வேளாண்மைத் துறை மூலமாக ஊராட்சியில் பணிபுரிந்து வருகிற சில தொழிலாளர்களுக்கு அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் 374 ஒன்றியங்களுக்கு 374 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மேற்கொண்டு 374 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அதற்கிடையில் நடமாடும் வண்டிகள் மூலமாக பழுது பார்க்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. அந்தந்த ஊராட்சிகளே பழுது பார்த்துக்கொள்ளவும் அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the answer given by the Hon. Minister, the power sprayers are often under repairs. Actually, I have used three power sprayers in my field but none of them is working because their quality is not good. I am really disgusted with them because they are not in a working condition. So, may I know whether any concrete steps will be taken to see that they are in a working condition so that ryots could get some benefit?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தரமான இயந்திரங்கள் வாங்கவேண்டுமென்றுதான் அரசு பரிசீலனை செய்து, தரமான நிறுவனத்தின்மூலம் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு. வழங்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக இந்த இயந்திரங்கள் கொடுக்கப்பட்டு வருகிற காரணத்தாலே, பயிற்சி பெறுபவர்கள், எடுத்துச் செல்பவர்கள், சரியாகத் துடைத்தோ, அல்லது கழுவியோ, அல்லது பராமரித்தோ கொடுக்காத காரணத்தாலே, அடிக்கடி பழுதுபட்டு விடுகிறது. அதை நீக்கத்தான் இந்தத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. தரமான இயந்திரங்களை, மேலும் தரமான இயந்திரங்களை வாங்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

1973 நவம்பர் 26]

திருமதி த. ந. அனந்தநாயகி : விசைத் தெளிப்பான்களை எல்லாம் எந்தக் கம்பெனியிடமிருந்து வாங்குகிறது என்பதை அரசு தெரிவிக்குமா? வாங்கும்போது டெண்டர் கேட்டு, கொட்டேஷன்ஸ் கேட்டு வாங்கினர்களா? அல்லது மொத்தமாக வாங்கி விட்டார்களா? அரசாங்கத்திலே சப்ளைஸ் அண்ட் டிஸ்போசல்ஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அந்த மாதிரி டிபார்ட்மெண்ட் மூலமாக வாங்க முயற்சி எடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே, டெண்டர் கோரப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இயந்திரங்கள் தரமானவையா என்பதை ஆராய ஒரு குழு இருக்கிறது. அதனுடைய பரிசிலனைக்குப் பிறகுதான் இவை வாங்கப்படுகின்றன. எந்த எந்த கம்பெனி என்பதைப்பற்றி இப்பொழுது என்னிடத்திலே தகவல் இல்லை.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, விசைத் தெளிப்பான் பழுதுபட்டுப் போவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். சில ஊராட்சி ஒன்றியங்களில் ஆயில் இன்ஜின்களையும் வாங்கி வைத்திருக்கிறோம். ஜீப் இருக்கிறது சில ஊராட்சி ஒன்றியங்களிடம். ஆகவே, அவைகளை எல்லாம் பழுதுபார்ப்பதற்கு மெக்கானிக்கை ஒவ்வொரு யூனியனிலும் வைக்க அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதுவரையிலே அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் இல்லை.

கெங்குரெட்டி ரோடில் இருப்புப்பாதை கடவு

***409 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை பளிப்பாரா—

சென்னை, எழும்பூர் கெங்குரெட்டி ரோடு இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.